Birmensdorf

உலகத்திற்கு உண்மையாக
தேவையானது ஒன்றுதான்,
அது, ஒவ்வொரு பிள்ளையையும்
தனது தாய் மண்ணில் சந்தோஷமாக
வளர விடுவதுதான். (Chief Dan George)

ஒரு பிள்ளையை வளர்ப்பதற்கு
முழு கிராமமும் தேவைப்படுகிறது.
(Afrika)

# பிள்ளைகள் தான் ஆகாயத்திற்கான பாலங்கள்

**(Persien)**

Birmensdorf, ஆவணி 2009

**„உன்னைப்பற்றி என்னிடம் சொல், நான் உன்னிடம் என்னைப்பற்றி சொல்கிறேன்“**
**ஒரு கலாச்சார பரிமாற்றம்.**

அன்பான பெற்றோருக்கு,

எமது ஆரம்பக்கல்வி பாடசாலைக்கு தற்சமயம் 33 பல் வேறு நாட்டுப் பிள்ளைகள் வருகிறார்கள். நடைபெறுகிற பாடசாலை ஆண்டில் முக்கிய நிகழ்வாக „உன்னைப்பற்றி என்னிடம் சொல், நான் உன்னிடம் என்னைப்பற்றி சொல்கிறேன்“ எனப்படும் கலாச்சார பரிமாற்ற விடயம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.
அன்பான பெற்றோர்களே உங்களை நாங்கள் இத்திட்டத்திற்காக தேடுகிறோம். உங்களுக்கு உங்கள் நாட்டைப்பற்றி, மொழி பற்றி, கலைகள் பற்றி இன்னும் பல விடயங்கள் தெரியும்.

பல்வேறுபட்ட கலாச்சார மக்கள் எப்படி எங்கள் உலகத்தில் வாழ்கிறார்கள் என்றும் அவர்களுக்கு என்ன முக்கியமானது என்பதையும், உங்கள் உதவிகள் மூலம் உங்கள் பிள்ளைகளுக்கு அறியத்தர விரும்புகிறோம்.

இத்திட்டத்தின் வெற்றி பெற்றோராகிய நீங்கள் பாடசாலையுடன் சேர்ந்து செயல்படுவதில் தங்கியுள்ளது.
ஆகவே உங்கள் அனைவரையும் பங்களிக்குமாறு அழைக்கின்றோம். 3ம் திகதி ஆடி மாதம், 2010 அன்று ஆரம்ப வருட, கோடைகால திட்டத்தின் ஒன்றிணைந்த விழாவிற்கு திட்டமிட்டப்பட்டுள்ளது. பலகலாச்சார விழா பற்றிய மேலதிக தகவல்கள் பெற்றோர் தகவல் மாலையில் கொடுக்கப்படும்.

நீங்களும் இணைந்து செயல்படுவீர்களா?

உங்களுடைய ஆர்வங்களை தட்டி எழுப்பியுள்ளோம், அத்துடன் புதிர் நிறைந்த சந்திப்புகளை இட்டு இப்போதே மகிழ்வடைகின்றோம்.

ஒழுங்கமைப்பு

M. Mäder Schulleitung

L. van Herpen Präsidentin Elternrat

Schuleitung@primabirmensdorf.ch

elternrat@primabirmensdorf.ch